සෞඛ්‍ය හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය

சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு

Ministry of Health & Mass Media

"අසිතිසි – වෙකුසන ඌටක පුලමෛප්පරිසිල් නිකළ්ච්සිත් තිට්ටම් – 2026

ஊடகவியல் பயிற்சி கற்கை நெறிக்கான நிதியுதவி வழங்குதல்

நோக்கம்

- இலங்கை ஊடகவியலாளர்களின் தொழில்துறை தன்மையை மேலோங்கச் செய்தல்

இலக்காகும் குழு

- 02 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள மற்றும் 2413/44ஆம் இலக்க 2024.12.05ஆம் திகதியில் அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள வகைப்படுத்தலுக்கு உரித்தான ஊடகவியலாளராக இருக்க வேண்டும்.

  (https://www.news.lk/images/pdf/sinhala%20gazette.pdf)

தெரிவு செய்யப்படும் முறை

- நேர்முகத் தேர்வுக்காக விண்ணப்பம் கோரப்படும் திகதியில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களினால் வழங்கப்படும் எந்தவொரு பயிற்சியும், ஊடகத் துறையுடன் கலாநிதி, முதுமாணி, இளமாணி பட்டம், பட்டப்பின் படிப்பு டிப்ளோமா, டிப்ளோமா, குறுகிய கால அல்லது நீண்டகால சான்றிதழ் கற்கை நெறிக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள அல்லது தற்போது கற்கை நெறியைக் கற்பவராக இருக்க வேண்டும். (நேர்முகத் தேர்வின்போது கற்கை நெறிக்காக தெரிவு செய்யப்பட்டமை பற்றி அல்லது அதைக் கற்பதாக அல்லது தொடர்புடைய நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.)
- விண்ணப்பிக்கும் கற்கை நெறி ஊடகத் துறையுடன் தொடர்புடைய கற்கை நெறியாக இருக்க வேண்டும்.
- விண்ணப்பப் படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளில் 18 - 55 வயதிற்கு இடைப்பட்டவராக இருக்க வேண்டும்.
- அரசாங்கத் தகவல் திணைக்களத்தினால் ஊடகவியலாளர்களுக்காக 2025/2026 வருடத்திற்கு வழங்கப்பட்ட ஊடக அடையாள அட்டையை சமர்ப்பிக்க வேண்டும்.
- இந்த புலமைப்பரிசில் முன்மொழிவுத் திட்டத்தின் ஊடாக அனுகூலத்தைப் பெற்று அந்தக் கற்கை நெறியை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மட்டும் மீண்டும் விண்ணப்பிக்கலாம்.

நிதி வசதிகள் வழங்குதல்

- கற்கை நெறிக்காக செலுத்தப்படும் பணம் - கலாநிதி பட்டத்திற்கு 700,000.00 ரூபா, முதுமாணி பட்டத்திற்கு மற்றும் இளமாணிப் பட்டத்திற்கு அதிகூடிய தொகை 350.000.00, பட்டப் பின்படிப்பு டிப்ளோமா, குறுகிய கால அல்லது நீண்டகால சான்றிதழ் கற்கை நெறிக்காக அதிகூடிய தொகை 200,000.00 ரூபாவாகும்.
- புலமைப்பரிசிலுக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு கற்கை நெறிக் கட்டணத்தின் 50% தொகையை கற்கை நெறியின் ஆரம்பத்தில் முதலாவது தவணையாகவும், மிகுதி 25% தொகையை இரண்டாவது தவணையாகவும், மிகுதி 25% தொகை கற்கை நெறியைப் பூர்த்தி செய்து சான்றிதழைச் சமர்ப்பித்ததன் பின் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.

பாடங்கள்:

i. ஊடக தொடர்பாடல் (Mass Communication)
ii. தொழில்நுட்ப கல்வி (Technical subject)

உதாரணம் : வீடியோ தொகுப்பு (Video Editing)
செவிப்புல தயாரிப்பு (Audio Production)
சமூக ஊடக முகாமைத்துவம் (Social Media Management)
இணையதள உள்ளடக்க ஆக்கம் (Web Content Creation)
பல்லூடக உற்பத்தி (Multimedia Production)

iii. அரசறிவியல் (Political Science)
iv. பொருளியல் (Economics)
v. சமூகவியல் (Sociology)
vi. சர்வதேச உறவுகள் (International Relations)
vii. சட்டம் (Law)
viii. அனர்த்த முகாமைத்துவம் (Disaster Management)
ix. குற்றவியல் (Criminology)
x. மொழி (Language) - சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் மாத்திரம்
xi. தரவு ஊடகவியல் - Data Journalism

- இதற்குப் புறம்பாக ஊடகத்தோடு தொடர்புடைய ஏனைய பாடங்களுக்கு விண்ணப்பித்தால் செயலாளரின் ஒப்புதலின் கீழ் கவனத்திற் கொள்ளப்படும்.

தெரிவு செய்யப்படும் முறை

- சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் தெரிவுக் குழுவினால் நேர்முகத் தேர்விற்கு உட்படுத்தப்பட்டு புலமைப்பரிசில் பயன்பெறுநர் தெரிவு செய்யப்படுவர். இறுதித் தீர்மானத்தை அமைச்சின் செயலாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

விண்ணப்பப் படிவம் அனுப்ப வேண்டிய முறை

- பின்வரும் QR குறியீட்டை ஸ்கேன் செய்து நிகழ்நிலை முறையின் ஊடாக www.media.gov.lk இணையதளத்திற்கு நேரடியாக பிரவேசித்து அங்குள்ள விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து அல்லது பணிப்பாளர் (ஊடகம்), சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு, இல. 163, "அசிதிசி மெதுர", கிருலப்பனை மாவத்தை, பொல்ஹேன்கொட, கொழும்பு 05 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''அசிதிசி வெகுசன ஊடக புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம்" எனத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்க வேண்டும்.
- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளல் 2026 ஜூன் மாதம் 10ஆம் திகதி அன்று நிறைவுறும்.

கவனிக்க வேண்டியது

- புலமைப்பரிசில் கையளிக்கப்பட்ட பின்னர் அமைச்சுடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்ள வேண்டும் என்பதுடன் குறித்த கற்கை நெறியை 06 மாத காலத்திற்குள் ஆரம்பிக்க வேண்டும். இல்லையெனில் புலமைப்பரிசிலை இரத்துச் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தொடர்புகளுக்கு : 0112 513645
சந்தன : 0714 - 931696, மனோஜா : 0764 - 203645
மேலதிக விபரங்கள் : www.media.gov.lk

செயலாளர்,
சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு.